**நவம்பர் – 09**

# TNPSC துளிகள்

- கேரள அரசானது "ஹரிதா கர்ம சேனா" என்ற ஒரு படையை (பசுமை நடவடிக்கைப் படை) உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
    - இது நகரத்திலுள்ள வீடுகளில் இருந்து சேகரித்துப் பிரித்த கழிவுகளை கொச்சி மாநகராட்சிக் கழகத்திற்கு கொண்டு செல்வதற்கான ஒரு படையாகும்.
- விண்வெளி வீராங்கனையான வாங் யாப்பிங், விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண்மணி என்ற ஒரு பெருமையைப் பெற்றுள்ளார்.
    - வாங் யாப்பிங்கின் பயணக் குழுவானது தியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு வெளியே ஒரு ஆறு மணி நேரப் பயணத்தை நிறைவு செய்தது.

# தேசியச் செய்திகள்

## சைகோவ் – D




- சைடஸ் கேடில்லா நிறுவனத்தின் தயாரிப்பான, 3 தவணைகள் அளவிலான சைகோவ் – D எனும் கோவிட் – 19 தடுப்பு மருந்தினை ஒரு தவணைக்கு ரூ.265 என்ற விலை வீதத்தில் ஒரு கோடி தவணைகளை மத்திய அரசு வாங்க உள்ளது.
- சைகோவ் – D என்பது உலகில் மனிதப் பயன்பாட்டிற்கு வந்த முதலாவது டி.என்.ஏ பிளாஸ்மிடு தடுப்பு மருந்தாகும்.
- இந்தத் தடுப்பு மருந்தானது வழக்கமான ஊசிக் குழல் மூலம் செலுத்துவதற்குப் பதிலாக ஊசியற்ற ஒரு சாதனத்தைப் பயன்படுத்திச் செலுத்தப்படும்.
- அந்தச் சாதனமானது "பார்மாஜெட்" என அழைக்கப்படும்.
- சைகோவ் – D மருந்தின் மூன்று தவணைகள் 28 நாட்கள் இடைவெளியில் வழங்கப் படும்.

## காடர் பழங்குடியினர்

- காடர் பழங்குடியினத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் ஆனைமலைப் புலிகள்

காப்பகத்தின் உள்பகுதியில் வீட்டுமனைக்கான பட்டாக்களைப் பெற்றுள்ளனர்.

- காடர் என்பவர்கள் தமிழகத்திலுள்ள கோயம்புத்தூர் மற்றும் கேரளாவிலுள்ள கொச்சின் ஆகியவற்றுக்கு இடையிலான மலைப்பாங்கான எல்லைப்பகுதியினூடே வாழும் தென்னிந்தியாவின் ஒரு சிறிய பழங்குடி இனமாகும்.
- கேரள மாநிலத்தின் 5 பழமையான பழங்குடிகளுள் ஒன்றான காடர் இனமானது அந்த மாநிலத்தின் மொத்த பழங்குடியின மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 5 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- இவர்கள் தமிழ் மற்றும் கன்னடம் போன்ற திராவிட மொழிகளைப் பேசுகின்றனர்.
- காடர் பழங்குடியினர் கேரளாவில் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுக்களாக பட்டியலிடப்பட்டுள்ள அதே வேளையில் அவர்கள் தமிழகத்தில் அவ்வாறு குறிப்பிடப் படவில்லை.
- இந்தக் குழுவின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளப் பழங்குடியினர் 2006 ஆம் ஆண்டு வன உரிமைகள் சட்டத்தின் கீழ் வாழிட உரிமைகளைப் பெற அனுமதி பெறுவர்.

## உலகத் தலைவர்களை ஏற்பது குறித்த தரவரிசை




- மார்னிங் கன்சல்ட் என்பதின் கூற்றுப் படி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்தத் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- இவர் 70% ஏற்பு வீதத்துடன் இந்தத் தரவரிசையில் முன்னணியில் உள்ளார்.
- மோடி உலகெங்கிலும் உள்ள இளம் பருவத்தினர் மத்தியில் அதிகபட்ச ஏற்பினைப் பெற்றுள்ளார்.
- இதில் மெக்சிகோ நாட்டு அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவேல் லோபஸ் ஓப்ராடோர் 2வது இடத்தில் உள்ளார்.

- இவரைத் தொடர்ந்து இத்தாலிய நாட்டின் பிரதமர் மரியோ டிராகி (58%) இடம் பெற்று உள்ளார்.
- இதில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் 6வது இடத்தில் உள்ளார்.

### ஸ்ரீநகர் விமான நிலையம் – "முக்கிய விமான நிலையம்"


- மத்திய வான்வழிப் போக்குவரத்து அமைச்சகமானது ஸ்ரீநகர் விமான நிலையத்தினை 2008 ஆம் ஆண்டு விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் கீழ் ஒரு முக்கிய விமான நிலையமாக அறிவித்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது ஸ்ரீநகர் விமான நிலையத்தில் விமானச் சேவைகளை வழங்குவதற்கான மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் பயணிகள் சேவை கட்டணம் உள்ளிட்ட கட்டண வரிகளை நிர்ணயிக்க விமான நிலையப் பொருளாதார ஒழுங்கு முறை ஆணையத்திற்கு வழி வகை செய்யும்.
- ஒரு விமான நிலையத்தின் வருடாந்திரப் பயணிகள் போக்குவரத்தானது ஒரு குறிப்பிட்ட அளவைக் கடந்தால், மத்திய அரசானது அந்த விமான நிலையத்தை ஒரு முக்கிய (பெரு) விமான நிலையமாக அறிவிக்கிறது.
- இதற்கு முன்பு, ஸ்ரீநகர் விமான நிலையத்தின் போக்குவரத்தினை இந்திய விமான நிலைய ஆணையம் தீர்மானிக்கும்.
- இந்திய விமான நிலைய ஆணையம் வான்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனம் ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

### நிதி உள்ளடக்க அளவீடுகள் அறிக்கை

- பாரத ஸ்டேட் வங்கியானது தனது நிதி உள்ளடக்க அளவீடுகள் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது பாரத ஸ்டேட் வங்கி குழுமத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகரான சௌமியா காந்தி கோஷ் என்பவரால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2015 ஆம் ஆண்டில் 100000 இளம் பருவத்தினருக்கு 13.6 என்ற ஒரு எண்ணிக்கையில் என்று இருந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையானது, 2020 ஆம் ஆண்டில் 14.7 ஆக உயர்ந்துள்ளது.
- பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா திட்டம் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு போன்றவையே இதற்கான காரணமாகும்.
- இந்த எண்ணிக்கையானது ஜெர்மனி, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதிகமாகும்.
- 2015 ஆம் ஆண்டில் 1000 இளம்பருவத்தினர் மத்தியில் 183 ஆக இருந்த இணைய வங்கிப் பரிவர்த்தனைகள் 2019 ஆம் ஆண்டில் 13, 615 ஆக அதிகரித்துள்ளது.
- பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா கணக்குகளில் இருப்புத் தொகைகளை அதிக அளவில் கொண்ட மாநிலங்களில் குற்றங்கள் ஒரு சரிவைச் சந்தித்துள்ளன.
- அதிக அளவில் பிரதான் மந்திரி ஜன்தன் கணக்குகள் துவக்கப் பட்ட மாநிலங்களில் மது மற்றும் புகையிலைப் பொருட்கள் போன்ற போதைப் பொருட்களின் நுகர்வானது ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் பொருளாதார அளவில் கணிசமான வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

- 2010 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் 34,174 என்ற எண்ணிக்கையில் இருந்த கிராமப் புற வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 12.4 லட்சமாக உயர்ந்துள்ளது.




## மாநிலச் செய்திகள்

### மூங்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட கிரிக்கெட் மட்டை




- திரிபுராவின் மூங்கில் மற்றும் பிரம்பு மேம்பாட்டு நிறுவனமானது வடகிழக்குப் பயன்பாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து இந்தியாவில் முதன்முறையாக மூங்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கிரிக்கெட் மட்டையை உருவாக்கியுள்ளது.
- இந்த கிரிக்கெட் மட்டைகளை உருவாக்க ஹார்டு பூம் வகை (உள்ளூர் பெயர்) மூங்கிலானது பயன்படுத்தப் பட்டது.

- இந்த மட்டைகளை அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் பயன்படுத்தச் செய்யலாம்.
- கிரிக்கெட் மட்டைகளைத் தயாரிக்கப் பெரிதும் பயன்படுத்தப்படும் மரமானது வில்லோ மரமாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பசவஸ்ரீ விருதுகள் 2021




- கன்னட நடிகர் புனீத் ராஜ்குமாருக்கு பிருஹன் மத் (மடம்) அமைப்பானது 2021 ஆம் ஆண்டிற்கான பசவஸ்ரீ விருதினை அவரது இறப்பிற்குப் பின்னதாக வழங்க உள்ளது.
- பப்பு என அன்புடன் அழைக்கப்படும் புனீத் சென்னையில் பிறந்தவராவார்.
- இந்த விருதானது பகவான் பசவேஷ்வருடைய கொள்கைகளைப் பின்பற்றி அவரவர் துறைகளில் சமூகத்திற்கென செய்த சேவைகளுக்காக வேண்டி அந்த நபர்களுக்கு வழங்கப் படுகிறது.
- இது 1997 ஆம் ஆண்டு முதல் சித்ர துர்கா பிருஹன் மத் (மடம்) அமைப்பால் வழங்கப் படுகிறது.
- P.T. உஷா (2009), மலாலா யூசுப்சாய் (2014), P. சாய்நாத் (2016), டாக்டர்.K. கஸ்தூரிரங்கன் (2020) ஆகியோர் சமீபத்தில் இந்த விருதினை வென்றவர்களாவர்.

## டென்சிங் நார்கே தேசிய சாகச விருது 2020

- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டு டென்சிங் நார்கே தேசிய சாகச விருதிற்கு பிரியங்கா மோஹித் என்பவரைத் தேர்வு செய்துள்ளது.
- இவர் மகாராஷ்டிராவைச் சேர்ந்த 28 வயதான மலையேறும் வீராங்கனை ஆவார்.
- இந்த விருதானது நிலம் சார்ந்த சாகசத் துறையில் இவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக வேண்டி வழங்கப்படுகிறது.
- இவர் எவரெஸ்ட், லோட்சே மற்றும் மக்காலு போன்ற உலகின் மிக உயரிய சிகரங்களில் ஏறியுள்ளார்.
- இவர் உலகின் 10வது உயரிய மலைச் சிகரமான அன்னபூர்ணா சிகரத்தில் ஏறிய

முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.

- 2020 ஆம் ஆண்டு டென்சிங் நார்கே தேசிய சாகச விருதுகளைப் பெறும் 7 நபர்களுள் பிரியங்காவும் ஒருவராவார்.

| Awardee | Category |
|---|---|
| Priyanka Mangesh Mohite | Land Adventure |
| Jay Prakash Kumar | Land Adventure |
| Col. Amit Bisht | Land Adventure |
| Sheetal | Land Adventure |
| Srikaanth Viswanathan | Water Adventure |
| Lt. Col. Servesh Dhadwal | Air Adventure |
| Jai Kishan | Life Time Achievement |

# விளையாட்டுச் செய்திகள்

## ISSF பிரசிடென்ட்ஸ் கோப்பை




- ISSF பிரசிடென்ட்ஸ் கோப்பைப் போட்டியின் தொடக்கப் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டெல் கலப்பு அணிப் பிரிவில் இந்தியாவின் மகளிர் பிஸ்டல் நட்சத்திர வீராங்கனை மனு பாக்கர் மற்றும் ஈரானிய ஒலிம்பிக் சாம்பியன் ஜாவத் பௌரௌகி ஆகியோர் தங்கம் வென்றனர் (ISSF – International Shooting Sport Federation – சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டிக் கூட்டமைப்பு).
- இந்த இந்திய – ஈரானிய ஜோடியானது பிரஞ்சு – ரஷ்ய ஜோடியான மதில்டே லாமோல் மற்றும் ஆர்டெம் செர்னோசோவ் ஆகியோரை வீழ்த்தி தங்கம் வென்றது.
- 7 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அணியானது ISSF பிரசிடென்ட்ஸ் கோப்பைப்

போட்டியில் பங்கேற்கிறது.

- இந்தப் போட்டியானது போலந்து நாட்டிலுள்ள வ்ரோக்லோ எனுமிடத்தில் நடத்தப் பட்டது.

### ரஷீத் கான்

- ஆப்கானிஸ்தானின் ஒரு சுழற்பந்து வீச்சாளரான ரஷீத் கான் T20 போட்டியில் 400 விக்கெட்டுகளை வீழ்த்திய இளம் வயது பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்று உள்ளார்.
- இவர் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒரு போட்டியில் இந்தச் சாதனையை நிகழ்த்தி உள்ளார்.
- T20 கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணியின் மார்டின் கப்தில் என்பவர் தான் ரஷீத் வீழ்த்திய 400வது விக்கெட் ஆகும்.
- மேற்கிந்தியத் தீவுகளின் டுவைன் பிராவோ (553) மற்றும் சுனில் நரைன் (425), தென் ஆப்பிரிக்காவின் இப்ராஹிம் தாஹீர் (420) ஆகியோரையடுத்து 400 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களின் வரிசையில் இணையும் 4வது வீரர் இவராவார்.




## முக்கிய தினங்கள்

### உலக நகர்ப்புற தினம் – 08 நவம்பர்

- உலக நகர்ப்புற தினமானது "உலக நகரத் திட்டமிடல் தினம்" எனவும் அழைக்கப் படுகிறது.
- வாழ்வதற்கு ஏதுவான சமூகங்களை உருவாக்குவதில் திட்டமிடுதலின் பங்கினை அங்கீகரித்து அதை ஊக்குவிக்கும் வகையில் இத்தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது நகரம் மற்றும் பிராந்திய அளவில் திட்டமிடுபவர்களுக்கான சர்வதேச

சங்கத்தினால் அனுசரிக்கப் படுகிறது.




## தமிழ் அகராதி தினம் – 08 நவம்பர்

- இத்தினமானது இத்தாலிய சமயப் பரப்புனரான கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்சி என்பவரின் பிறந்த நாள் நினைவைக் குறிக்கிறது.
- இவர் வீரமாமுனிவர் எனவும் அழைக்கப் படுகிறார்.
- இவர் சதுரகராதி என்ற முதல் தமிழ் அகராதி வெளிவரக் காரணமாக இருந்தவர் ஆவார்.
- முன்னதாக அறிஞர்கள் பயன்பாட்டிலுள்ளச் சொற்களை ஆவணப்படுத்தினர்.
- இந்த ஆவணத் தொகுப்புகள் 'நிகண்டு' என அழைக்கப்பட்டன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★